# பத்திரிக்கைச் செய்தி

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கடலூர் பிரிவு அலுவலகத்தை அணுகி தான் புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்ப மனு கொடுத்ததாகவும், அம்மனு மீது நடவடிக்கை எடுக்க திரு.மணிமாறன், உதவியாளர், தாலுகா விநியோக அலுவலகம், காட்டுமன்னார்கோவில், கடலூர் மற்றும் மணிமாறனுக்கு தரகராக செயல்படும் திரு.ராஜசேகர், தனிநபர் ஆகியோர் ரூ.500/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாக புகார் மனு அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 21.05.2021 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.மணிமாறன், உதவியாளர், ரூ.500/-யை லஞ்சமாக புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் மேற்படி மணிமாறன் மற்றும் ராஜசேகர் கைது செய்யப்பட்டனர்.

# PRESS NOTE

The complainant approached the Vigilance & Anti – Corruption, Cuddalore Detachment and gave complaint that he had applied new ration card, for which Tr.Manimaran, Assistant, Taluk Supply Office, Cuddalore and Tr.Rajasekar, Private Individual who is a tout for Manimaran demanded bribe amount of Rs.500/- for issuing the new ration card. In this connection a case was registered and a trap was organized today 21.05.2021.

During the course of trap proceedings, Tr.Manimaran, Assistant, reiterated the earlier demand and received the bribe amount of Rs.500/- from the complainant. Both the accused were arrested.